# இல்லத்தில் பாதம் கழுவுதல் துணை வழிபாடு

**விதிமுறை : இந்த துணை வழிபாடு அனைத்து குடும்ப உறுப்பினர்கள் இருக்கும் போது நடைப்பெற வேண்டும். குடும்பத்தின் தலைவராக இருப்பவர் தலைவர் எனும் பகுதியை ஏற்று நடத்துவார் அல்லது குடும்ப தலைவர் இல்லை என்றால் குடும்பத்தில் மூத்தவர் இதைச் செய்யலாம். ஒரு பாத்திரம், துண்டு, தண்ணீர், குவளை இவை அனைத்தும் முன் கூட்டியே தயார் செய்து வைத்திருக்க வேண்டும்.**

**குடும்ப உறுப்பினர்கள் பீடத்திற்கு முன்பாக ஒன்றுக்கூடிய பின் கீழ் காணும் செபத்தை சேர்ந்து சொல்லவும்.**

## முதல் பகுதி : வார்த்தை வழிபாடு

"நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்புகொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை. தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை. நான் கட்டளை இடுவதையெல்லாம் நீங்கள் செய்தால் நீங்கள் என் நண்பர்களாய் இருப்பீர்கள். இனி நான் உங்களைப் பணியாளர் என்று சொல்ல மாட்டேன். ஏனெனில் தம் தலைவர் செய்வது இன்னது என்று பணியாளருக்குத் தெரியாது. உங்களை நான் நண்பர்கள் என்றேன்; ஏனெனில் என் தந்தையிடமிருந்து நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன்.
**(யோவான் 15:12-15)**

தலைவர் : தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே
எல் : ஆமென்
தலைவர் : ஆண்டவரின் பெயர் ஆசீர் பெறுவதாக
எல் : இன்றும் என்றென்றும்
தலைவர் : ஆண்டவர் போற்ற பெறுவாராக
எல் : இன்றும் என்றென்றும்

தலைவர் : செபிப்போமாக
நீங்கள் என்னை 'போதகர்' என்றும் 'ஆண்டவர்' என்றும் அழைக்கிறீர்கள். நீங்கள் அவ்வாறு கூப்பிடுவது முறையே. ஆகவே ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளை கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்."
ஆண்டவரே, நாம் ஒரு குடும்பமாக இங்கு கூடியுள்ளோம். ஒருவர் மற்றவருக்கு அன்புச் செய்யவும், மதித்து பணிப்புரியவும் உமது கட்டளை தொடர்ந்து கடைபிடிக்கவும் நாங்கள் வேண்டுகிறோம்.

**இறைவசனம் யோவான் 13:1-17**

## இரண்டாம் பகுதி : பாதம் கழுவுதல்

**விதி முறை** : அனைவரும் அமர்ந்துக் கொள்ளலாம். குடும்பத்தில் மூத்தவர் குடும்ப உறுப்பினர்களின் பாதங்களை கழுவுவர். இதன் பின் குடும்பத்தில் இருக்கும் அனைவரும் இவ்வாறு செய்வார்கள். குடும்பத்தில் ஆக கடைசியாக இருப்பவர் குடும்பத்தில் இருப்பவர்களின் பாதங்களை இறுதியாக கழுவார்.

**விதி முறை : குடும்பத்தில் பாதங்களை கழுவிய பின் சமாதானத்தின் முத்தத்துடன் அல்லது அரவணைப்பையுடன் இச்சடங்கை ஒரு நிறைவுக்கு கொண்டு வரலாம்.**

### நிறைவு செபம்

ஆண்டவரே, கிறிஸ்துவின் செய்தியும் அவரது பலியும் நம் இதயங்களில் ஆணி வேராக இருந்திட மன்றாடுகிறோம். அவரின் கருணை மிக்க கொடை நம் அனைவருக்கும் ஒரு உதாரணமாக இருந்து நன்றி நிறைந்த வாழ்வுக்கு நம்மை இட்டுச் செல்வதாக. இயேசுவோடு தனிப்பட்ட வாழ்வின் உறவில் நாம் வளரவும், நம் வழியில் வரும் அனைத்திலும் நாம் நன்றி உள்ளவர்களாக வளர்வோமாக. இச்செபத்தை எல்லாம் நம் ஆண்டவர் கிறிஸ்து வழியாக மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.
**நிறை பாடல் : நிறைவு செபத்தின்**